# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2012 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை (திருத்தச்) சட்டம்*

---

*(2012 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2012*, பெப்புருவரி மாதம் *17* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 5.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**2012 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை (திருத்தச்) சட்டம்**

[2012 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ–ஓ. 44/2011

**1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1**. இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, சட்டத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்)1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(1) சபை, சனாதிபதியால் நியமிக்கப்படவேண்டிய ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்படுதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "ஐந்தாண்டுகளைக் கொண்ட காலப்பகுதிக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மூன்றாண்டுகளைக் கொண்ட காலப்பகுதிக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில், "பணிப்பாளர் தலைமையதிபதி, மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது வேறு எவரேனும் உறுப்பினர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தவிசாளர்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை சேர்ப்பதன் மூலமும் :-

"(8) தவிசாளர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும் என்பதுடன் அறுதி யிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்திலிருந்து தவிசாளர் சமூகமாயிராதவிடத்து, சமூகமாயிருக்கும் உறுப்பினர் களால் தேர்ந்தெடுக்கப்படும் எவரேனும் உறுப்பினர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப் படுகின்றது:-

*"சபையின் பணிப்பாளர் தலைமை யதிபதியை நியமித்தல்.*

11. (1) சனாதிபதி சபையுடனான கலந்தா லோசனையுடன் சபையின் பணிப்பாளர் தலைமை யதிபதியை நியமித்தல் வேண்டும்;

(2) பணிப்பாளர் தலைமையதிபதி சபையின் பிரதம நிறைவேற்று அலுவலராதல் வேண்டும் ;

(3) சனாதிபதி, சபையுடனான கலந்தாலோ சனையுடன் பணிப்பாளர் தலைமையதிபதியை பதவியிலிருந்து அகற்றலாம்;

(4) பணிப்பாளர் தலைமையதிபதி சபையின் செயற்பாடுகளுடன் தொடர்புபடும் வகையில் மதியுரைத் தன்மையொன்றில் கூட்டங்களுக்கு சமூகமளித்தல் வேண்டும், ஆனால் அவற்றில் வாக்களிக்கும் உரிமைகள் எவற்றையும் கொண்டி ருத்தலாகாது ;

(5) சபை பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படற்பாலதான ஊதியத்தையும் ஏனைய நலன்களையும் தீர்மானித்தல் வேண்டும் ;

(6) பணிப்பாளர் தலைமையதிபதி சபையின் பொதுவான பணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக் கமைய அவரது பணிகளைப் புரிதல் வேண்டும் ;

(7) பணிப்பாளர் தலைமையதிபதி, அவருக்கு உரித்தாக்கப்பட்ட, அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை சபையின் எவரேனும் ஊழியருக்குக் கையளிக்கலாம் என்பதுடன், அத்தகைய ஊழியர் பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது விசேட பணிப்புகளுக்கமைவாக அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தல், நிறைவேற்றுதல் அல்லது புரிதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு "மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களைத் தவிர்த்து விடுவதன் மூலம் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்